

முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோபாலபுரத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு கழக துணைச் பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாட்டிற்குள் பாசிசம் வராமல் தடுக்க–

# தி.மு.க. - 200 இடங்களுக்கு மேல் வெல்லும்!

## பெரம்பலூர் – வேலூர் கிராமத்தில் வாக்களித்தபின் – ஆ.ராசா எம்.பி. பேட்டி!

பெரம்பலூர், ஏப். 25-

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்பி.யின் சொந்த ஊரான, பெரம்பலூர் மாவட்டம்,வேலூர் கிராமத்தில் வாக்கு செலுத்திய பின் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:



தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ள எண்ணற்ற அரசு திட்டங்களை கருத்தில் கொண்டும், முதல்வர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வந்துள்ள வளர்ச்சித்திட்டங்களை பாராட்டும் விதத்திலும் அதுமட்டுமின்றி பாசிச சக்திகளை தமிழ்நாட்டிற்குள் விடாமல் தடுக்க மு.க.ஸ்டாலினால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கையில் பெருவாரியான மக்கள் மிகுந்த எழுச்சியுடன் இன்று வாக்களித்து வருகின்றனர், எனது சொந்தக் கிராமத்திலும் அந்த எழுச்சியை காணமுடிகிறது.

கண்டிப்பாக பெரம்பலூர் மட்டுமல்ல தமிழ்நாட்டில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும்,

தமிழ்நாட்டில் இது வரை எந்த தேர்தலிலும் இல்லாத அளவிற்கு 2026 சட்டமன்ற தேர்தலில் வெளிமாநில முதல்வர்கள் மற்றும் வடமாநில பா.ஜ.க. அமைச்சர்கள்

பா.ஜ.க. தலைவர்கள் என ஏராளமான பாசிச சக்திகள் தமிழ்நாட்டில் கூடாரம் அமைத்தும், கொட்டமடித்து கொண்டும் பிரச்சாரம் செய்து தமிழ் நாட்டை எப்படியாவது பிடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்காது, அவர்களை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஓட,ஓட விரட்டி விட்டார்கள் என்பதை உறுதிபடுத்துவதற்கான செய்தி இந்த தேர்தலில் தெரிகிறது என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், வேட்பாளர் டாக்டர் எஸ்.டி. ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் -

# தி.மு.க. அரசு - அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும்!

## கண்டனூரில் வாக்களித்தபின் – ப.சிதம்பரம் எம்.பி. பேட்டி!

காரைக்குடி, ஏப்.25-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கண்டனூரில் உள்ள சிட்டாள் ஆச்சி பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நபராக முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வாக்களித்தார்.



பின்னர், அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் ஒரு நிலையான அரசு வேண்டும். வளர்ச்சி வேண்டும். மக்கள் நலத் திட்டங்கள் வேண்டும். இந்த மூன்று எதிர்பார்ப்புகள் தான் மாநிலம் முழுவதும் எதிரொலிக்கிறது. இந்த மூன்றையும் கடந்த முறை அளித்த திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அரசு, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ்நாட்டில் வரக்கூடிய அரசுக்கு பட்ஜெட் போடுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. அமைச்சர்கள் இருக்கிறார்கள், திறன் மிகுந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். வரவு செலவு கணக்கு போடும்போது மாநிலத்தின் சொந்த வருவாய், ஒன்றிய அரசின் வருவாய் ஆகிய இரண்டையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டும். இது ஒன்றிய அரசுக்கும் பொருந்தும், மாநில அரசுக்கும் பொருந்தும். ஒரு நிலையான அரசு, வலிமையான அரசு உறுதியான வரவு செலவு அறிக்கையை அளிக்கும். மாநிலத்தின் வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு அதிக அளவு கடன் பெறப்படுகிறதே என்கிறீர்கள்.

ஒன்றிய அரசுக்கு எவ்வளவு கடன் உள்ளது? கடன் பெறுவதில் தப்பில்லை. தமிழ்நாடு மட்டும் கடன் வாங்கவில்லை. அனைத்து நாடுகளும் கடன் வாங்குகின்றன. மாநில அரசின் இலவச திட்டங்கள் குறித்து விமர்சனம் எழுந்துள்ளதே என்கிறீர்கள். இலவச திட்டங்களால் மாநிலத்துக்கு எந்த சிக்கலும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிகரிப்பு

# தி.மு.க. ஆட்சி தொடரவே மக்கள் விரும்புகின்றனர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை பேட்டி!

சென்னை, ஏப். 25 -

தனது வீட்டில் சோதனை எதுவும் நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது அப்பட்டமான பொய் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம்சாட்டியுள்ளார்.



சென்னை சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களிடம் பேசிய செல்வப்பெருந்தகை, தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியை பெறும் என்று தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிகரித்துள்ளது என்றும், தி.மு.க. ஆட்சி தொடரவே மக்கள் விரும்பு கின்றனர் என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், தனது வீட்டில் வருமானவரித்துறை சோதனை நடத்தப்பட்டது உண்மை தான் என ஆதாரங்களை காட்டி உறுதிபடுத்தினார். சோதனை நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது சரியல்ல டெல்லியின் உத்தரவுக்கு பணிந்து வருமான வரித்துறை சோதனை நடத்தியது எனவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய செல்வப்பெருந்தகை, டெல்லியின் உத்தரவுக்கு பணிந்து தனது வீட்டில் சோதனை செய்துவிட்டு, தற்போது சோதனை நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது அப்பட்டமான பொய் என்று கண்டனம் தெரிவித்தார்.

மேலும், வருமானவரித்துறை சோதனை நடைபெற்றதற்கான வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களையும் அவர் வெளியிட்டார்.

அதிக இடங்களில்–

# தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்!

## கம்யூனிஸ்ட் தலைவர்கள் டி.ராஜா - பெ.சண்முகம் பேட்டி!

சென்னை, ஏப். 25-

தி.மு.க. கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் என, சென்னையில் வாக்கு செலுத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.





தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதையொட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, தி.நகர், தக்கர் பாபா வித்யாலயா பள்ளியிலும், மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வியாசர்பாடி மூர்த்தி நகரில் உள்ள நடுநிலைப் பள்ளியிலும் தங்களது வாக்குகளைச் செலுத்தினர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் ஆவடி மாநகராட்சியில் உள்ள கோயில்பதாகை தொடக்கப் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது:

டி.ராஜா: நமது ஜனநாயகத்தை வலுப்படுத்த வாக்கு செலுத்துவது என்பது ஒரு முக்கியமான உரிமையாகும். இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். அதே போல், மேற்கு வங்கத்திலும் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழகம் பா.ஜ.க. வின் பேரழிவு தரும் சித்தாந்தத்துக்கு எதிராக போராடுவதைப் போலவே, வங்காள மக்களும் பா.ஜ.க.வை எதிர்த்துப் போராடி தோற்கடிக்க வேண்டும்.

பெ.சண்முகம்: மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று, ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். நம்மை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கக் கூடியது இந்த தேர்தல். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும். இதற்கான அறிகுறிகள் தமிழ்நாடு முழுவதும் தென்படுகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

# ‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா!

## முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.25 -

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் ‘தமிழியல் கலைக்களஞ்சியம்’ வெளியீட்டு விழா இன்று (25.4.2026) மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்தி ரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார்.

சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக் கின்றனர்.

சேலம் – வாக்குச் சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த


# தி.மு.க. தொண்டர் மாரியப்பன் மறைவு! அதிர்ச்சியில் அவரது தாயாரும் மறைவு!

## அமைச்சர் ராஜேந்திரன் அஞ்சலி! மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் உதவி!

சேலம், ஏப். 25-

சேலம் வாக்குச்சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபட்டு இருந்த தி.மு.க. தொண்டர் நேற்று முன்தினம் மாரடைப்பால் இறந்த நிலையில் அவரது மறைவின் சோகத்தை தாங்க முடியாது அவரது தாயாரும் உயிர் இழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





உயிர் இழந்தவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய அமைச்சர் ராஜேந்திரன் அவரது குடும்பத்திற்கு மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கினார்.

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் அருகே, அத்திக்காட்டானூர் வாக்குச்சாவடியில் நேற்று முன்தினம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த தி.மு.க. தொண்டர் மாரியப்பன் வாக்குச் சாவடியில் திடீரென மயங்கி விழுந்து மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

இவரது மரணம் குறித்து தகவல் அறிந்த சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன், உயிரிழந்த மாரியப்பன் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிலையில் நேற்று காலை தி.மு.க. தொண்டர் மாரியப்பனின் தாயார் பழனியம்மாள் மகன் இறந்த அதிர்ச்சியில் இறந்துள்ளார்.

தி.மு.க. தொண்டர் மற்றும் அவரது தாய் இறந்தது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் இது குறித்து தகவல் அறிந்த சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் உடனடியாக நேரில் சென்று உயிரிழந்த பழனியம்மாளின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதோடு, தேர்தல் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த தி.மு.க. தொண்டர் மாரியப்பனின் குடும்பத்திற்கு உதவும் வகையில் அவரது மனைவி ராதாவிடம் மத்திய மாவட்ட திமுக சார்பில் 5 லட்ச ரூபாய் நிதி உதவி வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

அமைச்சருடன் தாரமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.

# அதானே...



ஒற்றுமை சிதைந்து
கூட்டுக் குடும்பமுறை
குலைந்து
பராமரிப்பு இல்லாது
பாழடைந்து போன
பூட்டாத வீட்டு
பொக்கிஷங்களை
புதிது புதிதாக ஊருக்குள்
போவோரும் வருவோரும்
அள்ளிக் கொண்டு போவதும்..

மிடுக்குக் குறையாத
பொலிவோடு
பாதுகாக்கப்படும்
பங்களாவோ ஆனந்தமான
அடுத்த கொண்டாட்டத்திற்கு
ஆயத்தமாவதும்
இயற்கை தானே...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்